
# SEATING ARRANGEMENT & PUZZLES

## (இருக்கை அமைப்பு மற்றும் புதிர்கள்)

**Q1. P, Q, R, S and T are sitting in a circle facing the centre. If R is immediate left of T and P is between S and T, who is to the immediate left of R?**

ஒரு வட்டத்தில், வட்ட மையத்தை நோக்கி P, Q, R, S மற்றும் T ஆகியோர் அமர்ந்துள்ளனர். T என்பவருக்கு இடப்புறம் அடுத்தப்படியாக R என்பவரும், S மற்றும் T ஆகிய இருவருக்கும் இடையே P என்பவரும் அமர்ந்திருப்பார்கள் எனில், R என்பவருக்கு இடப்புறம் அடுத்தப்படியாக அமர்ந்துள்ள நபர் யார்?




(A) P / P

(B) Q / Q

(C) S / S

(D) T / T

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q2. Some persons are standing in a queue. A child is standing 14th from the left and a woman is standing 8th from the right. If there are four persons between the child and the woman, how many persons are there in the queue?**


ஒரு வரிசையில் சில பேர் நின்று கொண்டிருக்கின்றனர். ஒரு குழந்தை அந்த வரிசையில் இடமிருந்து 14வது இடத்திலும் ஒரு பெண் வலமிருந்து 8 வது இடத்திலும் நிற்கின்றனர். குழந்தைக்கும், பெண்ணிற்கும் இடையில் 4 நபர் இருக்கும் அந்த வரிசையில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை என்ன?

(A) 25 / 25

(B) 26 / 26

(C) 29 / 29

(D) 32 / 32




The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939244344
www.weshineacademy.com

**Q3. The houses of a street are numbered from 1 to 49. Senthil's house is numbered such that the sum of numbers of the houses prior to Senthil's house is equal to the sum of numbers of the houses following Senthil's house. Find Senthil's house number?**

ஒரு தெருவில் உள்ள வீடுகளுக்கு 1 முதல் 49 வரை தொடர்ச்சியாக கதவிலக்கம் வழங்கப்பட்டுள்ளது. செந்தில் வீட்டிற்கு முன்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத்தொகையானது செந்தில் வீட்டிற்குப் பின்னதாக உள்ள வீடுகளின் கதவிலக்கங்களின் கூட்டுத் தொகைக்குச் சமம் எனில் செந்தில் வீட்டு கதவிலக்கத்தைக் காண்க.

(A) 35 / 35

(B) 25 / 25

(C) 30 / 30

(D) 20 / 20

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q4. Arun is older than Maran. Gopal is older than Maran but younger than Arun. Kapil is younger than Ram and Maran. Maran is older than Ram. Whose age is exactly in the middle of all the five?**

அருண் மாறனைவிடப் பெரியவர். கோபால் மாறனைவிடப் பெரியவர் ஆனால் அருணை விடச் சிறியவர். கபில், மாறன் மற்றும் ராமை விடச் சிறியவர். மாறன், ராமை விடப் பெரியவர் எனில் மேற்கண்டவர்களில் வயதில் நடுவில் இருப்பவர் யார்?

(A) Maran / மாறன்

(B) Ram / ராம்


(C) Arun / அருண்

(D) Gopal / கோபால்

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q5. A, B, C, D, E, F and G are sitting around a circle and are facing the centre. (i) G is second to the left of C, who is to the immediate left of F. (ii) A is third to the left of E. (iii) B is between D and E. Then, which of the following is the position of F?**

A, B, C, D, E, F மற்றும் G ஆகியோர் வட்ட மையத்தை நோக்கி, ஒரு வட்ட வடிவில் உட்கார்ந்துள்ளனர். (i) C யிலிருந்து இடது பக்கத்தில் இரண்டாவதாக G உட்கார்ந்து உள்ளார். மேலும் C, F க்கு இடது பக்கத்தில் அடுத்ததாக உள்ளார். (ii) E க்கு இடது பக்கத்தில் மூன்றாவதாக A உட்கார்ந்து உள்ளார். (iii) D மற்றும் E க்கு இடையில் B உள்ளார். எனில் F என்பவர் எந்த இடத்தில் உட்கார்ந்து உள்ளார்?



(A) Fourth to the right of D / D க்கு வலது பக்கத்தில் நான்காவதாக

(B) To the immediate left of C / C க்கு இடது பக்கத்தில் அடுத்ததாக

(C) Between A and E / A மற்றும் E க்கு இடையில்

(D) To the immediate right of A / A க்கு வலது பக்கத்தில் அடுத்ததாக

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q6. P is elder than Q. R is elder than Q but younger than P. S is elder than P but younger than T. Who is the youngest?**

P என்பவர் Q ஐ விட பெரியவர். R என்பவர் Q-வை விட பெரியவர் ஆனால் Pஐ விட சிறியவர். S என்பவர் P ஐ விட பெரியவர் ஆனால் Tஐ விட சிறியவர். இதில் யார் மிகச்சிறியவர்?

P > Q

P > R > Q

T > S > P > R > Q

T > S > P

(A) R / R

(B) T / T

(C) Q / Q

(D) S / S

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q7. There are 9 color boxes Red, Black, White, Green, Yellow, Blue, Orange, Violet, Pink but not necessarily in same order. Only 5 boxes placed between Red and White. Yellow is placed immediate above White. Only three boxes are placed between Yellow and Green. As many boxes placed between Red and Green as between Black and Yellow. Blue is placed below black but not at bottom. More than 4 boxes are placed between Yellow and Blue. one box is placed between blue and orange. Pink box is placed above Violet. Which box is placed immediate above and immediate below Black?**



ஒன்பது வண்ண பெட்டிகள் சிவப்பு, கருப்பு, வெள்ளை, பச்சை, மஞ்சள், நீலம், ஆரஞ்ச், ஊதா, இளஞ்சிவப்பு இருக்கின்றன. ஆனால் அதே வரிசையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஐந்து பெட்டிகள் சிவப்பு மற்றும் வெள்ளை பெட்டிகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளன. மஞ்சள் பெட்டியை வெள்ளை பெட்டிக்கு உடன் மேலே வைக்கப்பட்டுள்ளது. மூன்று பெட்டிகள் மட்டுமே மஞ்சள் மற்றும் பச்சை பெட்டிகளுக்கு இடையே உள்ளது. சிவப்பு மற்றும் பச்சை பெட்டிகளுக்கு இடையே உள்ள பெட்டிகளின் எண்ணிக்கையிலேயே கருப்பு மற்றும் மஞ்சள் பெட்டிகளுக்கு இடையில் உள்ளது. நீலப்பெட்டி, கருப்பு பெட்டிக்கு கீழே வைக்கப்பட்டுள்ளது, ஆனால் அது அடியில் வைக்கப்படவில்லை. நான்கு பெட்டிகளுக்கு மேல் மஞ்சள் மற்றும் நீலப் பெட்டிகளுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது. ஒரு பெட்டி நீலப்பெட்டிக்கும் ஆரஞ்சு பெட்டிக்கும் இடையில் வைக்கப்பட்டுள்ளது. இளஞ்சிவப்பு பெட்டி ஊதா பெட்டிக்கு மேல் வைக்கப்பட்டுள்ளது. எந்த பெட்டி கருப்பு பெட்டிக்கு மேலும், கீழும் இருக்கும்?

(A) Pink and Green / இளஞ்சிவப்பு மற்றும் பச்சை

(B) Pink and Violet / இளஞ்சிவப்பு மற்றும் ஊதா

(C) Green and Blue / பச்சை மற்றும் நீலம்

(D) Pink and Orange / இளஞ்சிவப்பு மற்றும் ஆரஞ்சு

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q8. Ravi ranks 9th in a class of 45 students. There are 18 students below Raj Rankwise. How many students are there between Ravi and Raj rankwise?**

45 மாணவர்கள் உள்ள வகுப்பில் ரவி 9 வது தரம் பெற்றுள்ளார். ராஜ்க்கு கீழே 18 மாணவர்கள் தரம் பெற்றுள்ளனர். ரவி மற்றும் ராஜ்க்கு இடைப்பட்ட தரம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன?

(A) 27 / 27

(B) 17 / 17

(C) 18 / 18

(D) 19 / 19

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q9. D, F, G, H, I and M are sitting in a row. I and M are in the centre, and F and D are at the beginning and at the end. G is sitting on the left of D. Then who is sitting on the right of F?**

D, F, G, H, I மற்றும் M ஆகியோர் வரிசையாக அமர்ந்துள்ளனர். I மற்றும் M ஆகியோர் மையத்திலும், F மற்றும் D ஆகியோர் முதலிலும், இறுதியாகவும் அமர்ந்துள்ளனர். G என்பவர் D-யின் இடதுபுறத்தில் அமர்ந்துள்ளார். அப்படியானால் F-ன் வலதுபுறத்தில் அமர்ந்திருப்பது யார்?

(A) H / H

(B) I / I

(C) M / M

(D) G / G

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q10. Five girls are sitting in a row. Rosy is not adjacent to Sivanandhini and Abi. Anuradha is not adjacent to Sivanandhini. Rosy is adjacent to Monika. Monika is at the middle in the row. Then, Anuradha is adjacent to whom out of the following?**

ஐந்து பெண்கள் ஒரு வரிசையில் அமர்ந்திருக்கிறார்கள். ரோஸி என்பவர் சிவநந்தினி மற்றும் அபிக்கு அருகில் இல்லை. அனுராதா சிவநந்தினிக்கு அருகில் இல்லை. ரோஸி மோனிகாவிற்கு அருகில் இருக்கிறாள். மோனிகா வரிசையில் நடுவில் இருக்கிறாள். பின்னர், அனுராதா பின்வருவனவற்றில் யாருக்கு அருகில் இருக்கிறாள்?

(A) Rosy / ரோஸி

(B) Sivanandhini / சிவநந்தினி

(C) Monika / மோனிகா

(D) Cannot be determined / தீர்மானிக்க முடியாது

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q11. A is shorter than B, but taller than C. D is shorter than A, but taller than C. E is shorter than B, but taller than A. The shortest person is**

A, B ஐ விட சிறியதும், C ஐ விட பெரியதுமாய் இருக்கிறது. D, A ஐ விட சிறியதும், C ஐ விட பெரியதுமாய் இருக்கிறது. E, B ஐ விட சிறியதும் A ஐ விட பெரியதுமாய் இருக்கிறது எனில் இதில் மிகவும் சிறியது எது?

(A) A / A

(B) B / B

(C) C / C

(D) D / D

(E) Answer not known / விடை தெரியவில்லை

B > A > C    A > D > C

B > E > A

B>E>A>D>C

We Shine Academy TM
Guiding you to get through

**Q12. There are five different houses, A to E, in a row. A is to the right of B and E is to the left of C right of A. B is to the right of D. Which of the houses is in the middle?**

A முதல் E முடிய வெவ்வேறு வீடுகள் ஒரே கிடைமட்ட வரிசையில் உள்ளன. இதில் A என்பது B இன் வலதுபுறத்திலும், E என்பது C இன் இடதுபுறத்திலும் மற்றும் A இன் வலதுபுறத்திலும் உள்ளன. மேலும் B என்பது D இன் வலதுபுறத்திலும் உள்ளன. மேற்கண்ட வரிசையில் நடுவில் உள்ள வீடு எது?

(A) A / A

(B) B / B

(C) D / D

(D) E / E

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q13. A, B, C, D, E and F are cousins. No two cousins are of the same age but all have birthdays on the same date. The youngest is 17 years old and the oldest E is 22. F is somewhere between B and D in age. A is older than B. C is older than D. Which of the following is not possible?**

A, B, C, D, E மற்றும் F ஆகியோர் ஒன்றுவிட்ட சகோதரர்கள். அவர்களில் எந்த இரு சகோதரர்களும் ஒத்த வயதினர் அல்ல. ஆனால், அனைவருக்கும் பிறந்த தினம் சமம். அவர்களில் மிகக்குறைந்த வயது உடையவர் 17 வயதும், மிக அதிக வயது கொண்ட E, 22 வயதும் உடையவர். F ஆனவர் B மற்றும் D க்கு இடையில் உள்ள ஏதோ ஒரு வயது கொண்டவர். A என்பவர் B ஐ விட பெரியவர். C என்பவர் D ஐ விட பெரியவர். எனில் கீழ்க்கண்டவற்றில் எது சாத்தியமில்லை?

(A) D is 20 years old / D என்பவரின் வயது 20

(B) F is 18 years old / F என்பவரின் வயது 18

(C) F is 19 years old / F என்பவரின் வயது 19

(D) F is 20 years old / F என்பவரின் வயது 20

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q14. In a class of 35 students Kamal is placed seventh from the bottom whereas Suresh is placed ninth from the top. Ramesh is placed exactly in between the two. What is Kamal's position from Ramesh?**

ஒரு வகுப்பில் 35 மாணவர்கள் உள்ளனர். கீழிலிருந்து கணக்கிடும்போது கமல் என்பவர் ஏழாவது இடத்தில் உள்ளார், மேல் இருந்து கணக்கிடும் போது சுரேஷ் என்பவர் ஒன்பதாவது இடத்தில் உள்ளார். ரமேஷ் என்பவர் இவ்விருவருக்கும் இடையில் உள்ளார். ரமேஷ் உடன் ஒப்பிடும் போது கமல் எந்த இடத்தில் உள்ளார்?

(A) 9 / 9

(B) 10 / 10

(C) 11 / 11

(D) 13 / 13

(E) Answer not known / விடை தெரியவில்லை

**Q15. Sum of the incomes of A and B is greater than the sum of the incomes of C and D. Sum of the incomes of A and C equals the sum of the incomes of B and D. A gets half the sum of incomes of B and D. Who gets the highest income?**

A மற்றும் B என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகையானது C மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகையை விட அதிகம். A மற்றும் C என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகை B மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூட்டுத்தொகைக்குச் சமம். A என்பவர் B மற்றும் D என்பவர்களின் ஊதியங்களின் கூடுதலில் பாதியைப் பெறுகிறார். அதிக ஊதியம் பெறுபவர் யார்?

(A) A / A

(B) B / B

(C) C / C

(D) D / D

(E) Answer not known / விடை தெரியவில்லை